**நெல்லியாளம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 27.06.2023 ஆம் தேதி காலை செவ்வாய்கிழமை 11.00 மணிக்கு இந்நகராட்சியின் நகர்மன்றக் கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகளின் விவரம்.**

நகர்மன்ற தலைவர்,
நெல்லியாளம் நகராட்சி

**பொருள் எண்.1**

2022–2023ம் ஆண்டு 15வது நிதிக்குழு (Untied) திட்டத்தின் கீழ் செட்டிவயலில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் ரூ.3.50 இலட்சத்திற்கு 27.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. சுலைமான் , ஒப்பந்ததாரர் | 0.03% குறைவு |
| 2 | திரு. சக்கீர் உசைன், ஒப்பந்ததாரர் | 8.00% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சுலைமான், ஒப்பந்ததாரர் என்பவர் (0.03%) மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளியினை அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.189 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.2**

2022–2023ம் ஆண்டு 15வது நிதிக்குழு (Untied) திட்டத்தின் கீழ் வாழவயலில் செத்தக்கொல்லியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை மேம்பாடு செய்தல் ரூ.7.00 இலட்சத்திற்கு 27.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | திரு. தெய்வேந்திரன், ஒப்பந்ததாரர் | 24.00% குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.தெய்வேந்திரன், ஒப்பந்ததாரர் என்பவர் (24.00%) மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளியினை அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.190 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.3**

2022–2023ம் ஆண்டு பொது நிதித் திட்டத்தின் கீழ் பால்மேடு குடிநீர் கிணறு அருகில் தடுப்பணை மற்றும் குழாய் அமைத்தல் 10.00 இலட்சத்திற்கு 05.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.A.M.ஸ்கரியா, ஒப்பந்ததாரர் | 0.00% மதிப்பீட்டு தொகைக்கே ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. A.M.ஸ்கரியா, ஒப்பந்ததாரர் என்பவர் (0.00%) மதிப்பீட்டு தொகைக்கே ஒப்பந்தப்புள்ளியினை அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.191 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.4**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட கோட்டவயல் பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடத்திற்கு அருகாமையில் மண் சரிவு ஏற்பட்டு அடிக்கடி Septic Tank செல்லும் குழாய் உடைந்து வருவதால் கழிப்பிடம் உபயோகப்படுத்த முடியாமல் மக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே இதன் அருகாமையில் தடுப்புச்சுவர் அமைத்து குழாய் அமைக்க ரூ.4.50 இலட்சம் செலவாகும். இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.192 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.5**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட தேவாலா திருவள்ளுவர்நகர் பகுதியில் பொது நிதியின் கீழ் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து திருவள்ளுவர் நகர் செல்வதற்கு ஒரு பாலமும் மீதமுள்ள நடைபாதையும் அமைக்க உத்தேசமாக ரூ.4.90 இலட்சமாகும். இச்செலவினத்தினை வருவாய் நிதியில் மேற்கொண்டு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.193 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.6**

நெல்லியாளம் நகராட்சியில் உள்ள பல இடங்களில் குடிநீர் பயன்பயாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வந்த ¾" , 1" , 2" Hose பல வருடங்கள் ஆகிவிட்டதால் Hose உடைந்து குடிநீர் விநியோகம் செய்ய முடியாமல் மக்கள் மத்தியில் நகராட்சிக்கு மிகவும் அவப்பெயராக உள்ளதால், அவ்வப்போது ஏற்படும் உடைப்புகள் சரிசெய்ய Hose மாற்றி அமைக்க ரூ.4.00 இலட்சம் ஆகும். உடனடியாக Hose வாங்கி சீரான குடிநீர் வழங்க இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.194 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.7**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட தேவாலா பஜார் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நகராட்சி கடைகளுடன் கூடிய பஸ் நிறுத்துமிடம், Roof Slab மழைநீர் கசிவு ஏற்படுவதால், மக்கள் பயன்பாட்டிற்கு மிகவும் சிரமமாக உள்ளது. வரும் மாதங்களில் மழை தீவிரமடையும் சமயம் என்பதாலும், கட்டிடம் அமைக்கப்பட்டு சுமார் 20 வருடங்கள் ஆகிவிட்டதாலும், Slab களில் மழைநீர் தேங்கி வருவதால் Slab வலுவிழந்துள்ளது. கூரையின் மேற்பரப்பில் Tiles ஒட்டி மராமத்து பணி மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். இப்பணியினை மேற்கொள்ள ரூ.4.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பொதுநிதியின் கீழ் பணியின் அவசரம் கருதி பணி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.195 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.8**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூரில் அமைந்துள்ள புதிய பேரூந்து நிலையத்தின் அருகாமையில் உள்ள மின்கம்பம் மாற்ற வேண்டியுள்ளதாலும், வணிக வளாகத்தில் உள்ள கடைகளுக்கு செல்லும் Service Wire, Meter Board மாற்ற ரூ.2.00 இலட்சம் செலவாகும். இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.196 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.9**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட செட்டிவயல் பகுதியில் உள்ள நகராட்சி சிமெண்ட் கான்கிரீட் பாலம் உடைந்து விட்டதால், மக்கள் ஓடையை கடப்பது மிகவும் சிரமமாக உள்ளது. ஓடையில் இறங்கி கடக்க வேண்டியுள்ளதால், மழைகாலங்களில் குழந்தைகள் மற்றும் பெரியவர், பள்ளிக்கூடம் செல்வதற்கும் பணிக்கு செல்வதற்கும் மிகவும் சிரமமாக உள்ளதல், உடனடியாக இப்பணி மேற்கொள்ள ரூ.1.00 இலட்சம் செலவாகும். இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.197 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.10**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள பம்ப் அறைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அவைகளை சீர் செய்வது மிகவும் அவசியமாக உள்ளது. இனி வரும் காலம் மழை காலம் என்பதால் பழுதடைந்துள்ள மின்ஒயர்கள், ஸ்விட்ச்சுகள், கதவுகள் மற்றும் மராமத்து பணி பார்ப்பது மிகவும் அவசியமாக உள்ளதால் ரூ.4.95 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.198 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.11**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட முண்டக்குன்னு பகுதியில் உள்ள மக்களுக்கு சாலை போக்குவரத்து இல்லாமல் மழை காலங்களில் சகதியில் நடந்து செல்ல நேரிடுகிறது. மருத்துவமனைக்கு அவசர காலங்களில் செல்லக்கூட முடியாத நிலையில் உள்ளதாலும், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் இப்பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. ரூ.4.95 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.199 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.12**

நெல்லியாளம் நகராட்சியிக்குட்பட்ட பகுதியில் கொசுப்புழு ஒழிப்பு திட்டத்தை மேற்கொள்ள 300 வீட்டுக்கு ஒருவர் வீதம் 10729 வீட்டிற்கு 25 கொசு ஒழிப்பு பணியாளர்கள் (DBC WORKERS) தேவைப்படுகிறது. இது குறித்து நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.2571/2017/J1, நாள்.23.04.2018 அவர்களின் கடிதத்தின் படி நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் மேற்காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கு இணங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தினசரி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்ட கடிதம் எண்.7605/2022/பி2, நாள்.21.07.2022ன்படி நகராட்சி பகுதிகளில் 25 பணியாளர்கள், 150 பணி நாட்களுக்கு வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் 2023-2024ல் பொதுநிதியிலிருந்து ரூ.25.00 லட்சம் தொகையை செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.200 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.13**

நெல்லியாளம் நகராட்சியில் 21 வார்டுகளில் முதிர்ந்த கொசு மற்றும் புழு (லார்வா) நிலையில் உள்ள கொசு புழு ஒழிப்பு பணிக்காக நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.10608/2021/எச்1 நாள்.10.11.2021ல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நகராட்சிகளுக்கு தேவையான கொசு ஒழிப்பு மருந்துகளை வாங்குவதற்கு தமிழ்நாடு மெடிக்கல் கண்ட்ரோல் போர்டு, சென்னை (TNMSC) அவர்கள் நேரடியாக அரசு நிர்ணயம் செய்த விலையில் வாங்கிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்ட நிறுவனமான TAMILNADU MULTIPURPOSE INDICO SERVICE, திருச்சி என்ற கூட்டுறவு நிறுவனம், கொசு புழு மற்றும் முதிர்ந்த கொசுக்களை ஒழிக்கும் பணிக்கு தேவையான மருந்துகள் மிக குறைந்த அளவே இருப்பு உள்ளது. Pyrethrum -2% extract புகை மருந்து மற்றும் Temephos தண்ணீர் தொட்டி மருந்து, BT மருந்து சாக்கடைகளுக்கு அடிப்பதற்காக பயன்படுத்தும் மருந்துகளை வாங்க நேரடியாக கொள்முதல் செய்துகொள்ள 4.00 லட்சம் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.201 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்நாடுகாணி பகுதியில் WRO மூலம் ஆறு தூர்வாரப்பட்டுள்ளதால், ஆற்றோரத்தில் குடியிருக்கும் மக்களுக்கு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால், அப்பகுதிக்கு நடைபாதை அமைத்து தர 21வது வார்டு கவுன்சிலர் கடிதம் கொடுத்துள்ளார். இப்பணி மேற்கொள்ள நகர்ம்ன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.202 /2023, நாள்.27.06.2023 / திட்ட மதிப்பீடு தொகையை மன்றத்தில் வைக்கப்படும் பட்சத்தில் இப்பணியினை மேற்கொள்ளலாம்.**

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குட்பட்ட நாடுகாணி பகுதியில் 21வது வார்டில் உள்ள ஹசன் காலனியில் கழிவு நீர் கால்வாய் அமைத்து தர அப்பகுதி வார்டு கவுன்சிலர் கால்வாய் அமைத்து தர கோரி கடிதம் அனுப்பியுள்ளார். அதன்படி அப்பகுதியை ஆய்வு செய்தபொழுது கழிவுநீர் கால்வாய் இல்லாததால் சிமெண்ட் கான்கிரீட் நடைபாதையிலேயே கழிவுநீர் செல்வது அறியப்பட்டது. எனவே அவ்விடத்தில் கால்வாய் அமைப்பது மிகவும் அவசியம் என்பதால் உத்தேசமாக ரூ.4.50 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.203 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**பொருள் எண்.16**

இந்நகராட்சி மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு 2023-2024 –ஆம் ஆண்டிற்கு ஈமச்சடங்கு மானியம் நகராட்சி பொது நிதியில் வழங்க உத்தேச செலவுத்தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.204 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.17**

நெல்லியாளம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக ODF+ சான்று பெற நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.205 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.18**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களில் இரண்டு வாகனங்களை இயக்குவதற்கு வெளிக்கொணர்வு நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் இரண்டு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். மேற்படி ஓட்டுநர்களுக்கு 31.12.2022-வுடன் பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளது. காலம் நிறைவடைந்த நிலையில், அனைத்து தூய்மைபணியாளர்கள், ஓட்டுநர்கள் உட்பட ஒரே வெளிக்கொணர்வு நிறுவனத்தின் மூலம் நியமிக்க அரசு செயல்பட்டு வந்த நிலையில் தூய்மை பணியாளர்களை தூய்மை பணிக்கு அனுப்பி வந்த அட்சயா நிறுவன உரிமையாளர் சென்னை, உயர்நீதிமன்றத்தில் தடையாணை பெற்று உள்ளதால் அத்தடையாணையின் மீது உரிய உத்திரவுகள் கிடைக்கப்பெறும் வரை மேற்படி அட்சயா நிறுவனமே தொடர்ந்து தூய்மை பணியாளர்களை அனுப்பி வைக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது.

சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் இரண்டு ஓட்டுநர்களை இரண்டு வாகனங்களை இயக்கக் கூடிய J.B கன்ஸ்ட்ரக்சன் மற்றும் டிரான்ஸ்போர்ட் நிறுவனம் இந்நகராட்சிக்கு அனுப்பி பணி மேற்கொண்டு வருகிறது. மேற்படி தடையாணை விலக்கிக் கொள்ளும் காலம் வரையிலோ அல்லது நீதிமன்ற உத்திரவை பொறுத்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் உரிய உத்திரவு பிறப்பிக்கும் வரையில் தொடர்ந்து இரண்டு ஓட்டுநர்களை பணிமேற்கொள்ளவும் அதற்கான ஊதியத்தை வழங்கவும் உத்தேசமாக 01.01.2023 முதல் 31.12.2023 வரையிலான தொகையை அனுமதிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அவசர அவசியம் கருதி 01.01.2023 முதல் 31.12.2023 வரை பணி மேற்கொள்ளவும் அதற்கான ஊதியம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மன்றத்தின் முன் அனுமதி பெற்று செலவீனம் மேற்கொள்ள அனுமதிக்கலாம் 01.01.2023 முதல் 31.12.2023 வரை காலநீட்டிப்பு செய்து அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.206 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.19**

நெல்லியாளம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ODF+ சான்று பெற பொதுமக்களின் ஆட்சேபனை மற்றும் கருத்துகள் பெறுவதற்கு செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரி மாவட்டம் அவர்கள் மூலம் நாளிதழில் அறிவிப்பு செய்யவும் அதன்கான தொகை வழங்கவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.207 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.20**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பொது மக்களிடமிருந்து அன்றாடம் பெறப்படும் குடிநீர் விநியோகம் தொடர்பான புகார்களுக்கு தற்காலிக தீர்வாக கருதி வாடகைக்கு Tanker Lorry எடுத்து அதன் மூலம் தேவையான இடங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், மேலும் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கிணறுகளில் குடிநீரின் அளவு வறட்சி காரணமாக குறைந்து விடுவதால், பொதுமக்களுக்கு போதுமான குடிநீர் வழங்க இயலாத சூழ்நிலை உள்ளதை கருத்தில் கொண்டும், குடிநீர் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருத்தில் கொண்டும் மார்ச்சு, ஏப்ரல் மற்றும் மே ஆகிய மாதங்கள் குடிநீர் வறட்சி காலங்கள் என்பதாலும் Tanker Lorry மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.15.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 29.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் தொடர்ந்து வறட்சி காலம் என்பதால் குடிநீர் பற்றாக்குறையாக உள்ளது. ஆகவே பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய ரூ.15.00 இலட்சத்திற்கு இப்பணியினை நகராட்சி சட்ட விதிகள் 1920 பிரிவு 15–ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளிகள் மூன்று பெறப்பட்டு அதில் குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நபரை கொண்டு பணிகள் மேற்கொண்டு பட்டியல் தொகை வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.208 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.21**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 பகுதியில் அமைந்துள்ள மரப்பாலம் புளியம்பாறை போஸ்ட் ஆபீஸ் முதல் ஜெயநாதன் வீடு வரை மழைநீர் கால்வாய் அமைத்து தர கோரி நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, இடத்தை நேரில் ஆய்வு செய்து புளியம்பாறை போஸ்ட் ஆபீஸ் சாலை இணைப்பு சாலையை விட பள்ளமாக இருப்பதால், மழைக்காலங்களில் மழைநீர் வெள்ளம் போல் அடித்து செல்வதால் குடியிருப்பு பகுதிகளுக்கு மட்டும் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக இருப்பதால் கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மட்டும் பொறியாளர் அவர்களின் அறிவுரையை ஏற்று மதிப்பீடு ரூ.4.85 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.209 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

---

**பொருள் எண்.22**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 பகுதியில் மழை காலங்களில் மழைநீர் சாலை எங்கும் பரவி செல்வதால் பொது மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக இருப்பதாக நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுவை ஏற்று நகராட்சி ஆணையாளர் மட்டும் பொறியாளர் அவர்களின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.210 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

---

**பொருள் எண்.23**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 பகுதியில் அமைந்துள்ள மூச்சுக்கன்னு பகுதிக்கு சிறுபாலம் அமைத்து தர கோரி நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மனுவை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து நகராட்சி ஆணையாளர் மட்டும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து சாலை அமைந்துள்ள பகுதி மலை சரிவில் அமைதுள்ளதால் மழை காலங்களில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து சாலையின் வழியாக வழிந்து செல்கிறது. மேலும் குடியிருப்பு பகுதிகளுக்கு மண்சரிவு ஏற்படுத்தும் நிலை உள்ளதால் மழைநீரை சிறுபாலம் அமைத்து தாழ்வான பகுதிகளுக்கு திருப்பி விட வேண்டியுள்ளதால் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.211 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

---

**பொருள் எண்.24**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 பாறைக்கல் பகுதியில் பழைய இந்தியன் வங்கி அருகில் மழை நீர் வடிகால் இல்லாத காரணத்தால் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தால் மழைநீர் சாலை வழியாக வழிந்தோடுவதால் குடியிருப்பு பகுதி மட்டும் பொதுமக்களுக்கு சிரமமாக இருப்பதால் நகல் மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுவை ஏற்று நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.20 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 212 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.25**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 நெல்லியாளம் வாழவயல் பகுதியில் தடுப்புச்சுவருடன் கூடிய நடைபாதை அமைத்து தர கோரி நகர்மன்ற உறுப்பினர் / தலைவர் அவர்களின் கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.213 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.26**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 கல்லட்டியில் மூடியுடன் கூடிய கால்வாய் இல்லாத காரணத்தால் மழை சரிவான பகுதி என்பதால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிகையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து கல்லட்டியில் மூடியுடன் கூடிய கால்வாய் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.214 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.27**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 பகுதியில் கூவமூலா பழனியாண்டி வீடு அருகில் நடைபாதையுடன் கூடிய தடுப்பு இல்லாத காரணத்தால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுவை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்த இப்பணிக்கு பணிக்கு மதிப்பீடு ரூ.4.85 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.215 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.28**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 பகுதியில் அமைந்துள்ள தேவாலா ஹட்டி சிவன் கோவில் அருகில் நடைபாதை இல்லாத காரணத்தால் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.216 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.29**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 பகுதியில் அமைந்துள்ள பொன்னூர் SC Colony பகுதியில் குடியிருப்புகள் மலை சரிவில் அமைந்துள்ளதால் மழை காலங்களில் குடியிருப்பு பகுதிகளுக்கு மண் சரிவு ஏற்பட்டு குடியிருப்பு பகுதிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நிலை இருப்பதாலும், இப்பணியினை செய்து தரக்கோரி நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து பொன்னூரில் தடுப்புசுவருடன் கூடிய நடைபாதை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.217 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.30**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 பகுதியில் அமைந்துள்ள அத்திமாநகர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்து தரக்கோரி நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.218 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.31**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 மேஸ்திரிக்குன்னு பகுதியில் சாலை இல்லாத காரணத்தால் மலை சரிவான பகுதி என்பதால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து நேரில் ஆய்வு செய்து சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.219 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.32**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானம் பகுதியில் மழைநீர் வடிகால் வேண்டி நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிகையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து இப்பணிக்கு மதிப்பீடு ரூ.4.20 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.220 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.33**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 சோலவயல் பகுதியில் சாலை இல்லாத காரணத்தால் மலை சரிவான பகுதி என்பதால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமாக இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.221 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.34**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட கே.கே.நகர் வார்டு எண்.10 பகுதியில் நடைபாதை இல்லாத காரணத்தால் மலைசரிவான பகுதி என்பதால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர் பெறப்பட்ட கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து தடுப்பு சுவருடன் கூடிய நடைபாதை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.30 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.222 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.35**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 பகுதியில் அமைந்துள்ள அண்ணாநகர் காலனி பகுதியில் தடுப்பு சுவருடன் கூடிய நடைபாதை அமைத்து தர கோரி நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து தடுப்பு சுவருடன் கூடிய நடைபாதை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.223 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.36**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 தொண்டியாளம் பகுதியில் மழை நீர் வடிகால் அமைத்து தரக்கோரி நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து இப்பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.224 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.37**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 78 Area பகுதியில் சாலை இல்லாத காரணத்தால் மலை சரிவான பகுதி என்பதால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளரின் அறிவுரையை ஏற்று இடத்தை நேரில் ஆய்வு செய்து சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.225 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.38**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பகுதியில் அமைந்துள்ள கோட்டக்குன்னு பகுதியில் நடைபாதை இல்லாத காரணத்தால், நடைபாதை அமைத்து தர கோரி பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் கடிதத்தை ஏற்று நகராட்சி ஆணையாளர் மட்டும் பொறியாளர் அவர்களின் அறிவுரையை ஏற் இடத்தை ஆய்வு நேரில் ஆய்வு செய்து நடைபாதையுடன் கூடிய தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ. 2.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.226 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.39**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 பகுதியில் அமைந்துள்ள பெருங்கரை பொதுமயானத்திற்கு சாலை இல்லாத காரணத்தால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாக நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுவை ஏற்று, இடத்தை நேரில் ஆய்வு செய்து நகராட்சி ஆணையாளர் மட்டும் பொறியாளர் அவர்களின் அறிவுரையை ஏற்று மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.227 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.40**

பார்வை– வட்டார வளர்ச்சி அலுவலர், கூடலூர் அவர்களின் கடிதம் ந.க.அ4 எண்.0854/2022 நாள். 24.04.2023

*******

பார்வையில் காணும் வட்டார வளர்ச்சி அலுவலர், கூடலூர் அவர்களின் கடிதம் வாயிலாக 16 பள்ளிகளை நெல்லியாளம் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | மையத்தின் பெயர் | No. of Buildings | Kitchen shed availability | Survey No. |
|---|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, உப்பட்டி | 4 | 1 | 1773/3 |
| 2 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தேவாலா | 4 | 1 | 195 |
| 3 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தேவாலா ஹட்டி | 4 | 1 | 327/4 |
| 4 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வாழவயல் | 5 | 1 | 95/1 |
| 5 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, கரோலின் கிழக்கு | 2 | 1 | 2000/1 |
| 6 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, கரோலின் மேற்கு | 1 | 0 | 1986 |
| 7 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, நெல்லியாளம் | 2 | 0 | 1630/1 |
| 8 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, அத்திக்குன்னா | 4 | 2 | 1245 |
| 9 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, சேலக்குன்னா | 2 | 1 | 1145 |
| 10 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, பந்தலூர் | 3 | 3 | 2349/1 |
| 11 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, கூவமூலா | 3 | 1 | 2134/1 |
| 12 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, நாடுகாணி | 1 | 1 | 517/2 |
| 13 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, புளியம்பாறை | 3 | 1 | 586/7 |
| 14 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, குன்றில்கடவு | 2 | 1 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி, பாண்டியார் | 1 | 1 | 556 |
| 16 | ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி, பொன்னூர் | 2 | 1 | 363/4 |

மேற்காணும் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 16 பள்ளிகளையும் நெல்லியாளம் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டதால், பள்ளிகளின் பெயர்கள் கீழ்கண்டவாறு மாற்றப்படுகிறது.

| வ.எண். | மையத்தின் பெயர் |
|---|---|
| 1 | நெல்லியாளம் நகராட்சி நடுநிலைப்பள்ளி, உப்பட்டி |
| 2 | நெல்லியாளம் நகராட்சி நடுநிலைப்பள்ளி, தேவாலா |
| 3 | நெல்லியாளம் நகராட்சி நடுநிலைப்பள்ளி, தேவாலா ஹட்டி |
| 4 | நெல்லியாளம் நகராட்சி நடுநிலைப்பள்ளி, வாழவயல் |
| 5 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப்பள்ளி, கரோலின் கிழக்கு |
| 6 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப்பள்ளி, கரோலின் மேற்கு |
| 7 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப்பள்ளி, நெல்லியாளம் |
| 8 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப்பள்ளி, அத்திக்குன்னா |
| 9 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப்பள்ளி, சேலக்குன்னா |
| 10 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப்பள்ளி, பந்தலூர் |
| 11 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப்பள்ளி, கூவமூலா |
| 12 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப்பள்ளி, நாடுகாணி |
| 13 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப்பள்ளி, புளியம்பாறை |
| 14 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப்பள்ளி, குன்றில்கடவு |
| 15 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப் பள்ளி, பாண்டியார் |
| 16 | நெல்லியாளம் நகராட்சி துவக்கப் பள்ளி, பொன்னூர் |

நெல்லியாளம் நகராட்சி பள்ளிகளாக எடுத்துக்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.228 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.41**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறையின் அரசாணை(நிலை) எண்.10 நாள்.23.01.2023 அன்று பணியமைப்பு, நகராட்சி நிவ்ாகம் நகராட்சிகளின் நிலைக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்து மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்தி ஆணை வெளியிடப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், தமது கடித்ததில் நெல்லியாளம் நகரட்சியின் நிலை இரண்டாம் நிலை என்றும் நகராட்சிகளின் நிலைக்கேற்ப பணியிடங்களை தோற்றுவிப்பதற்காக வரையறைகள் (Norms) நிர்ணயம் செய்ததில்

1) நகராட்சி பொறியாளர் நிலை III AE/JE = 1 No.
2) பணி மேற்பார்வையாளர் = 1 No.
3) படவரைவாளர் நிலை III = 1No.
4) பணி ஆய்வர் (W.I) = 2No.

என பொறியியல் பிரிவில் பணியாற்ற நிர்ணயம் செய்துள்ளார்.

தற்பொழுது நெல்லியாளம் நகரட்சியில், நகராட்சி பொறியாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர் உள்ளார்கள். மேலும்

1) படவரைவாளர் நிலை III =1 எண்ணம்
2) பணி ஆய்வாளர் =2 எண்ணம்

பணியிடங்கள் காலியாக உள்ளன. நகராட்சியில் திட்ட பணிகள் அதிக அளவில் நடைபெற்று வருவதாலும், மேலும் திட்டப்பணிகளுக்கான பிரேரணைகள் சென்னையில் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், பணியினை மேற்கொள்ள போதுமான அலுவலர்கள் இல்லாத காரணத்தால் காலியாக உள்ள பணியிடங்களுக்கு தின கூலி அடிப்படையில் மூன்று நபர்களை அமர்த்தி பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.229 /2023, நாள்.27.06.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

ஒப்பம்

**(திருமதி. சி.சிவகாமி.)**
நகர்மன்ற தலைவர்,
நெல்லியாளம் நகராட்சி.

**// உண்மை நகல் //**

ஆணையாளர்,
நெல்லியாளம் நகராட்சி.